(Reg. No. 961/1997)



# செய்திமடல்


*நோபல் லாரேட்*

## அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்

துணை அமைப்பு

## அன்னை தெரசா பேரவை

அலுவலகம் :43, நெல்சன்மாணிக்கம் சாலை, சூளைமேடு, சென்னை – 600 094

**போன்: 91-44-23743883 Fax: 91-44-23742699 Web: www.motherteresacharities.org**

Email: motherteresain@yahoo.co.in / mtct1997@yahoo.co.in


---

**சென்னை டிசம்பர் 10,2010**

பேரன்புடையீர்,

வணக்கம். அன்னை தெரசா பேரவையின் டிசம்பர் மாத செய்திமடல் வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி. நமது பேரவையின் நோக்கம், எதிர்கால திட்டங்கள், நாம் செய்துவருகின்ற பணிகள் இன்று நாட்டின் பல்வேறு தரப்பு மக்களாலும் பாராட்டப்படுவது நமக்கெல்லாம் புதிய ஊக்கத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

அண்மையில் நான் டில்லியில் நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து நடத்திய "கிறிஸ்மஸ்" விழாவில் கலந்து கொண்டேன். அவ்விழாவில் மதவேறு பாடின்றி அனைத்து தரப்பு மக்களும் கலந்துகொண்டார்கள்.நமது பிரதமர் மற்றும் மத்தியஅமைச்சர்கள் கலந்து கொண்டு வாழ்த்து வழங்கினார்கள்.இவ்விழாவில் கலந்து கொண்ட சிலரிடம் நம் அன்னை தெரசா பேரவையின் செயல்பாடுகள் குறித்து பேசினேன்.அவர்கள் நம் அன்னை தெரசா பேரவையில் இணைந்து செயல்பட முன்வந்திருக்கிறார்கள். ஓரிசா மாநிலத்தில் சமூக சேவை செய்துவரும் திரு. ஜோஸ்வா சேனா, என்பவர் அம்மாநிலத்தில் கமிட்டி அமைத்து செயல்பட முன்வந்திருக்கிறார். அதேபோல, ஆந்திராவில் திரு. சாந்தபூசன், நெல்லூரில் திரு. பானுபிரசாத் ஆகியோரும் அன்னை தெரசா பேரவையை ஆந்திர மாநில முழுதும் செயல்படுத்துவதாக உறுதி கூறியுள்ளார்கள்.

ஒரு இனிப்பான செய்தி. சிறந்த கல்விமானும், முன்னாள் மத்திய அரசின் செயலாளரும். நூருல் இஸ்லாம் பல்கலைகழகத்தின் வேந்தரும், சமுக ஆர்வலருமான டாக்டர் முத்துநாயகம் அவர்களும் மற்றும் முன்னாள் பங்களுர் நகர காவல்துறை ஆணையரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போது மத்திய அரசின் சிறுபான்மை ஆணையத்தின் துணைத்தலைவருமான திரு.H.T. சங்கலியானா IPS (Rtd) Ex.M.P, அவர்களும் நமது அன்னை தெரசா பேரவையில் ஆட்சிமன்ற குழு உறுப்பினர்களாக (Governing Board Member) இணைந்து ஆலோசனை வழங்க முன்வந்திருக்கிறார்கள். இவர்களுடைய வரவு நம் பேரவைக்கு ஊக்கமும், ஆக்கமும் நல்கும் என்பதில் ஐயமில்லை.

நாம் ஏற்கனவே கூறியதுபோல மாவட்டத்திற்கு 10,000 உறுப்பினர் என்ற இலக்கை எட்டுவதற்கு ஒவ்வொரு மாவட்டத்தலைவரும் நிர்வாகிகளும் உடனடியாக களமிறங்கவேண்டும். வருகிற 18–ம் தேதி சென்னையில் தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைவர்கள், பொதுசெயலாளர்கள் மற்றும் அகில இந்திய (தென் மண்டல) நிர்வாகிகள் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கூட்டத்திற்கு வரும்போது ஒவ்வொரு மாவட்டத்தலைவரும், தங்கள் மாவட்டத்தில்

சேர்த்த உறுப்பினர் படிவத்தோடு வரவேண்டும் கூட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யபட்டு முடிவுகள் எடுக்கப்படும்.

மீண்டும் பல நல்ல செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

**ஜி.கே.தாஸ்**
மேனேஜிங் டிரஸ்டி

**மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறை தொழில் முனைவோர் பயிற்சி (EDP)**

இந்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறை மற்றும் அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்




ஆகியவை இணைந்து ஆறு வார கால இலவச தொழில் முனைவோர் பயிற்சி மதுரை மாவட்டத்தில் கடந்த நவம்பர் 8 அன்று துவங்கப்பட்டு இம்மாதம் 17–ம் தேதி நிறைவுபெற உள்ளது.

மேலும் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் 27.11.2010 அன்று இப்பயிற்சிக்கான ஆரம்பவிழா நடைபெற்றது. நமது நிறுவனர் திரு.ஜி.கே.தாஸ், அவர்கள் குத்துவிளக்கேற்றி முகாமை துவங்கி வைத்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தலைவர் திரு.T.N. ரிட்சர்டு ராஜசேகர் அவர்கள் தலைமை தாங்கினார். திரு.D.பென்னி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செங்கல்பட்டு நகரமன்ற தலைவர் திருமதி.R ஜெயா ராஜகோபால் மற்றும் செங்கல்பட்டு வருவாய் கோட்ட அலுவலர் திரு.D.லெனின் ஜேக்கப், B.Sc., ஆகியோர் முகாமை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினர். அன்னை தெரசா பேரவையின் டிரஸ்டி திரு.A.சேவியர்,M.Com., மற்றும் திரு.C.விஜயகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநில பொருளாளர் திரு. M.R. பாலசுப்ரமணியம், திருவள்ளூர் மாவட்ட தலைவர் திரு.குணசேகரன் தென்சென்னை மாவட்ட துணைத் தலைவர் திரு.சிவாஜிநாதன், பொதுசெயலாளர் திரு.R.சுப்ரமணியம், வடசென்னை மாவட்ட செயலாளர் திரு.K.N.மோகன்ராவ், செங்கல்பட்டு மாவட்ட துணைத்தலைவர் திரு.J.S. காமராஜ், மாவட்ட செயலாளர்கள் திரு.குமரவேல், திரு.A.பலராமன், திரு.முனுசாமி, திரு.K.துரைராஜ், திரு.G.வினோத் கண்ணன்,ஆகியோர் கலந்து கொண்டனர். திரு.M.R. தமிழ்வளவன் அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**நாமக்கல் மாவட்டத்தில்–மாவட்ட அளவிலான கராத்தே போட்டி:**

மாவட்ட அளவிலான அஷிஹரா கராத்தே ஓப்பன் சேம்பியன்சிப் போட்டி 28.11.2010 அன்று நாமக்கல் நகராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சுமார் 300–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.மாவட்ட துணைபோலீஸ் சூப்பிரண்டுகள் திரு.வேலன், திரு.தம்பிதுரை ஆகியோர் இப்போட்டிகளை துவக்கி வைத்தனர். அஷிஹரா கராத்தே அமைப்பின் தலைவர் சென்சாய் செல்வகுமார் வரவேற்றார். அன்னை தெரசா பேரவையின் நாமக்கல் மாவட்ட தலைவர் சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். இதில் சின்ன முதலைப்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் திரு.லோகநாதன், அன்னை தெரசா பேரவையின் ஆட்சிமன்றகுழு உறுப்பினர் திரு.ஜி.ஏ.வடிவேலு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

55 கிலோ எடை பிரிவில் திரு. சின்னராசு முதல் பரிசையும், கோவிந்தராஜ் 2–வது பரிசையும் தட்டிச்சென்றனர். 55 கிலோவுக்கு மேல் உள்ள எடை பிரிவில்

ரவிகுமார் முதல் பரிசையும், சுரேஷ்குமார் 2–வது பரிசையும் பெற்றனர். வெற்றி பெற்ற வீரர்களுக்கு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை துணை அமைச்சர் மாண்புமிகு திரு.**காந்தி செல்வன்** பதக்கம் மற்றும் பட்டயங்களை வழங்கினார். முடிவில் தலைமை பயிற்சியாளர் சென்சாய் சந்திரசேகரன் நன்றி கூறினார்.

**வேலூர் மாவட்டத்தில் அன்னை தெரசா பேரவையின் ஆலோசனை கூட்டம் :**

அன்னை தெரசா பேரவையின் வேலூர் மாவட்ட ஆலோசனை கூட்டம் கடந்த **12.12.2010** அன்று ஞாயிற்றுக்கிழமை, மாலை **3.00** மணிக்கு நடைபெற்றது.



நமது நிறுவனர் **திரு.ஜி.கே.தாஸ், டிரஸ்டி திரு. A.சேவியர், திரு. D.வசீகரன், அகில இந்திய துணைப்பொதுசெயலாளர்** ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். வேலூர் பகுதியில் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் வைக்கப்பட்டது. கூட்டத்திற்கு வேலூர் மாவட்டத்தலைவர் திரு.A.கிருஷ்ணன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர்கள் திரு.T.வனராஜ், திருமதி.R.கோவிந்தம்மாள், திரு.R.சுப்ர மணியம்,திருமதி.C.நீலம்மாள், திரு.B.பழனி திருமதி.மோகனா திருமதி R.ராதா, திரு.கிருஷ்ணன்,,திரு.V.சாம்சன், ஆகியேர் முன்னிலை வகித்தார்கள். அம்மாவட்ட பொதுசெயலாளர் திரு.M.கோபால் வரவேற்புரை வழங்கினார். செயலாளர்கள் திருமதி.R.ராதா, திரு.T.மோகன் திரு.T.நரேந்திரன், திரு.V.முருகன் DME, வாணியம்பாடி வட்டாரத் தலைவர் திரு.C.அன்பு, ஆம்பூர் வட்டாரத்தலைவர் திரு.R.சின்னசாமி, பேர்னாம்பட் ஒன்றிய தலைவர் திரு.R.நாகராஜ், ஆம்பூர் நகர தலைவர் திரு.R.கிருஷ்ணன, திருப்பத்தூர் நகரத்தலைவர் திரு.T.K.ஆனந்தன், ஜோலார் பேட்டை தொகுதி தலைவர் திரு.V.முருகன், மாவட்ட பொருளாளர் திரு.C.ஆனந்தராஜ், செயலாளர் பார்வதி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் திருமதி. சுகந்தி, திருமதி. மகேஷ்வரி, திருமதி. புவனேஸ்வரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**அன்னை தெரசா நூற்றாண்டு விழா– சென்னையில் மாநில, மாவட்ட, மற்றும் அகில இந்திய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்:**

அன்னை தெரசா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில, மாவட்ட, மற்றும் அகில இந்திய நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் வருகிற 18.12.2010, சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எண்.21, திருவேங்கடபுரம் மெயின்ரோடு, சூளைமேடு, சென்னை–600094 என்ற முகவரியில் வைத்து நடைபெறவிருக்கிறது.

**சிறுநீரகம் பாதிக்கப்பட்டவருக்கு நிதி உதவி :**

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி அன்னை தெரசா பேரவை கூட்டம் கடந்த 4.12.2010 அன்று குமரி மாவட்டம் திங்கள் சந்தையிலுள்ள நமது இலவச கணிணி பயிற்சி மைய அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.. குளச்சல் தொகுதி தலைவர் திரு.S. மரியதாஸ் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். துணைத்தலைவர்கள் திரு.ஜெரால்டு கென்னடி, திரு.தேவதாஸ், திரு.ஹ.ராஜன், திரு. ஆறுமுகக்கண்ணு, திரு.ஜான்மில்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநில துணைத்தலைவர் A.ராபர்ட்புருஸ்,மாவட்டபொதுசெயலாளர்கள் திரு.மனோகர்சிங் ஆகியோர் சிறப்பு பார்வையாளர்களாக கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் தனது இரு சிறுநீரகங்களையும் பாதிக்கப்பட்ட மணவாளகுறிச்சி, ஆரண்விளையைச் சேர்ந்த திரு.இருதயராஜ் அவர்களின் மருத்துவ செலவிற்காக ரூ.50,000/–

நிதிஉதவி வழங்குவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**வேலூர் மாவட்டத்தில் புதிய நிர்வாகிகள் நியமனம் –**

வேலூர் மாவட்ட துணைத்தலைவர்களாக திரு.E.பழனி, திரு.V.சாம்சன், செயலாளர்களாக திரு.T.நரேந்திரன், திரு.V.முருகன் DME, வாணியம்பாடி வட்டாரத்தலைவராக திரு.C.அன்பு, ஆம்பூர் வட்டாரத்தலைவராக திரு.R.சின்னசாமி, பேர்னாம்பட் ஒன்றிய தலைவராக திரு.R. நாகராஜ், ஆம்பூர் நகரத்தலைவராக திரு. கிருஷ்ணன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**அன்னை தெரசா பேரவையின் திருவள்ளுர் மாவட்டம், ஆவடி, புதிய கன்னியம்மன் நகர் நிர்வாகிகள் நியமனம் :**

திருவள்ளுர் மாவட்டம், ஆவடி, வீராபுரம், புதியகன்னியம்மன் நகர் தலைவராக திரு.S.ஞானவேல், துணைத்தலைவர்களாக திரு.ரமேஷ், திரு.L.K.ரமேஷ், திரு.D.ராமர், திரு.A.R.ராஜ், திரு.S.வெங்கடேசன், செயலாளராக திரு.K.கணேசன்,துணைச்செயலாளர்களாக திரு.C.சிவா திரு.V.மோகன், திரு.P.குமார், திரு.ஏழுமலை, திரு.M.V.சுந்தரம், பொருளாளராக திரு.R.K.நாகராஜ், செயற்குழுஉறுப்பினர்களாக திரு.M.பழனி, திரு.V.எம்ரோஸ், திரு.G.விஸ்வநாதன், திரு.S.M.கண்ணன், திரு.D.சுதாகர், திரு.M.சுபாஸ், திரு.சங்கர், திரு.ரமேஷ்பாபு, திரு.B.சக்திவேல், திரு.N.பரமசிவன், திரு.M.முனிரத்தினம், திரு.பாண்டுரங்கன், திரு.கண்ணன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**புகையிலை இல்லா கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு:**

இம்மாதம் 9–ம் தேதி அன்று சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் புகையிலை இல்லா கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. இதில் சென்னையிலுள்ள மெட்ரிக்பள்ளிகளின் முதல்வர்கள் கலந்துகொண்டனர். அன்னை தெரசா பேரவையின் சார்பில் நமது அலுவலக நிர்வாகிகள் திருமதி.சத்தியா, திரு.அஜய்தாஸ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

புற்றுநோய் மருத்துவமனையின் உதவி பேராசிரியர் டாக்டர். இ.விதுபாலா அவர்கள் புகையிலை பயன்படுத்துவதால் என்னென்ன தீமைகள் ஏற்படுகிறது என்பது குறித்து விளக்கம் அளித்தார். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 10 லட்சம் பேர் மற்றும் ஒரு நாளைக்கு 2,500 பேர் புகையிலை சார்ந்த நோயினால் பாதிப்படைந்து மரணமடைகிறார்கள். சிகரெட்டில் 4,000 நச்சுப்பொருட்கள் இருக்கிறது. அதில் 56 பொருட்கள் புற்றுநோயை உருவாக்கக் கூடியவை. இதனை பயன்படுத்துவதால் புற்றுநோய் மாரடைப்பு, ஆண்மைக்குறைவு, நுரையீரல் பிரச்சனை, முளை பாதிப்பு போன்ற நோய்கள் வருகிறது. புகையிலை பொருட்களை 18 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு விற்றால் கடை உரிமையாளர்களுக்கு அபராதம் மற்றும் சிறை தண்டனை வழங்க சட்டத்தில் இடம் உள்ளது என்று பேசினார்.

அன்னை தெரசா பேரவையுடன் இணைந்து தமிழகம் முழுவதும் விழிப்புணர்வு குறித்த முகாம்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதற்கும் முன் வந்துள்ளார்கள்.

**அன்னை தெரசா பேரவை நடத்தும்வேலை வாய்ப்பு முகாம்:**

அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் மற்றும் IL&FS cluster Development Initiative Limited. இணைந்து,தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வேலை வாய்ப்பு முகாம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் 18 வயதிற்கு மேற்பட்ட ஐந்தாம் வகுப்பு தேறிய

கிராமபுற மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு தையற்பயிற்சி (textile & Leather), வாடிக்கையாளர் சேவை (Customer sales & services) மற்றும் Engineering Production (Welder, Fitter,CNC Operator etc) போன்றவற்றில் ஒரு மாத கால பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் போது ஊக்கத்தொகையும் வழங்கப்படும். பயிற்சி கால முடிவில் வேலையில் அமர்த்த அந்நிறுவனம் முன்வந்துள்ளது.

அன்னை தெரசா பேரவையின் மாவட்ட நிர்வாகிகள் இம்முகாமினை ஒழுங்குசெய்து, தகுதியுடையோர் பயனடைய ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(மேலும் தகவல்களுக்கு, தலைமை அலுவலகத்தை தொடர்பு கொள்க.

போன்: 044–23743883 ,23742699)

நன்றி,

**"Service to mankind is**
**Service to God"**